Lifeline மீண்டும் வாழ்வோம்

இடம்பெயர்ந்த மக்களுக்கான மனிதாபிமான தகவல் பரிமாற்றம்

Humanitarian Information For IDPs

Vol 1 - No 32 Pages 4 Sunday, 28 September 2008 Free Copy

துயர்துடைப்பார் யாருமின்றி தனித்து விடப்பட்ட வன்னி மக்கள்

இலங்கை அரசாங்கத்தின் வேண்டுகோளை அடுத்து வன்னியிலிருந்து ஐக்கிய நாடுகள் அமைப்புக்கள் மற்றும் சர்வதேச தொண்டு நிறுவனங்கள் அனைத்தும் முற்றாக வெளியேறியுள்ளன. வன்னியில் இடம்பெயரும் மக்களுக்கு வேண்டிய மனிதாபிமான பணிகளை மேற்கொள்வதற்கு ஏற்பட்டுள்ள இடைவெளியை அரசாங்க அதிபர்களின் நடவடிக்கையைப் பலப்படுத்துவதன் மூலம் நிவர்த்தி செய்ய அரசாங்கம் தீர்மானித்துள்ளது. அரசாங்கத்தின் இந்த செயற்றிட்டம் குறித்து கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபர் வேதநாயகனை தொடர்பு கொண்டு கேட்ட போது தமது மாவட்டத்தில் செயல்பட்டு வந்த சர்வதேச அரசசார்பற்ற நிறுவனங்களில் பணியாற்றிய கிளிநொச்சி மாவட்ட பணியாளர்கள் அரசாங்க அதிபரின் கீழ் தமது பணிகளை தொடர்வதற்கு வாய்ப்பு ஏற்படுத்தப்பட்டுள்ளதாக தெரிவித்தார்.

அரசாங்க அதிபரின் கீழ் பணியாற்ற விரும்பும் பணியாளர்கள் தொடர்பான விபரங்களை அவர்கள் பணியாற்றும் அரச சார்பற்ற நிறுவனங்கள் தனக்கு வழங்குவதற்கு இணங்கியுள்ளதாகவும் அரசாங்க அதிபர் கூறினார்.

இதன் அடிப்படையில் அவர்களுக்குரிய வேலைகளை தாங்கள் தீர்மானிக்கவுள்ளதாகவும் அவர்களுக்குரிய கொடுப்பனவுகளை அந்தந்த அரசசார்பற்ற நிறுவனங்கள் வழங்கவுள்ளதாகவும் இதன் காரணமாக கிளிநொச்சி மாவட்டத்தில் தோன்றியுள்ள மனிதாபிமான பணிகளுக்கான வெற்றிடங்களை ஓரளவிற்கு குறைக்க முடியும் என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

வன்னியில் இடம்பெயர்ந்து வாழும் குடும்பம்

வன்னியிலிருந்து மனிதாபிமான தொண்டர் அமைப்புக்கள் அனைத்தும் வெளியேறிய நிலையில் சர்வதேச செஞ்சிலுவை சங்கம் தனது பணிகளை அரசாங்கத்தின் அனுமதியுடன் அங்கு தொடர்கிறது. தற்போது தோன்றியுள்ள அசாதாரண சூழல் செஞ்சிலுவைச் சங்கத்தில் ஏற்படுத்தியுள்ள தாக்கங்கள் குறித்து அவ்வமைப்பின் குரல் தரவல்லவரும் வன்னி மாவட்டத்தில் தொடர்ந்தும் தனது மனிதாபிமானப் பணிகளை முன்னெடுத்து வருவதாக கூறினார்.

தமது பாகுபாடற்ற மத்தியஸ்தத்தை தொடர்ந்தும் முன்னெடுக்கப் போவதாக கூறிய அலெக்சாண்ட்ரியா. குறிப்பாக ஓமந்தைப் பகுதி ஊடாக போக்குவரத்தில் ஈடுபடும் மக்களுக்குத் தேவையான ஒத்துழைப்புகளையும் மற்றும் அந்த பகுதி ஊடான வாகனப் போக்குவரத்து, நோயாளர் காவு வாகன போக்குவரத்திற்கான அனுசரணையினையும் சர்வதேச செஞ்சிலுவை சங்கம் வழங்கும் என்றும் கூறினார். அத்துடன் வன்னிப் பகுதியில் மனிதாபிமானத் தேவைகளை கண்காணிப்பது குறித்து தொடர்ச்சியான கலந்துரையாடல்கள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் அவர் தெரிவித்தார்

இதேவேளை இடம்பெயர்ந்த மக்களுக்குத் தேவையான தற்காலிகத் தங்குமிட வசதிகள், சமைத்த உணவு, உலர் உணவு, மருந்து வகைகள், (3 ஆம் பக்கம் பார்க்க)

(3 ஆம் பக்கம் பார்க்க)



மீண்டும் வாழ்வோம் நிகழ்ச்சியானது சூரியன் எப்.எம். வானொலி ஊடாக சனிக்கிழமைகளில் காலை 6.00 முதல் 8.00மணி வரையும் கிழக்கு மாகாணத்தில் பிறை எப்.எம். வானொலி ஊடாக (FM 102 Mhz) ஞாயிற்றுக்கிழமைகளில் பிற்பகல் 1.30மணி முதல் 2.00மணி வரையும் புத்தளம் பிரதேசத்தில் அநுர் எப்.எம். ஊடாக ஞாயிற்றுக்கிழமைகளில் மாலை 6.45 முதல் 7.15 மணி வரையும் எமது நிகழ்ச்சி ஒலிப்பதிவுகளை www.radio.voicesofpeace.lk என்ற இணையத் தளத்திலும் கேட்கலாம்.

சுருக்கம்

✱ அரசாங்க அதிபர்களின் தகவல்களின் அடிப்படையில் திரட்டப்பட்ட IASC 143ஆவது அறிக்கையின் படி இலங்கையில் 65,089 குடும்பங்களைச் சேர்ந்த 239,844 பேர் அகதிகளாக இடம் பெயர்ந்த நிலையில் உள்ளனர்.

✱ வன்னிப் பகுதியில் வாழ்ந்து வருகின்ற மக்கள் இடம்பெயர்ந்து வவுனியாவிற்கு வரலாம் என எதிர் பார்க்கப்படுகிறது. பெருந்தொகையிலான மக்கள் வருகின்றபொழுது இடைத்தங்கல் முகாமில் தங்க வைக்கப்பட்டதன் பின்னர் அவர்களை மீளக்குடியமர்த்துவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுமென்றும், ஏற்கெனவே தெரிவு செய்யப்பட்டுள்ள மெனிக்பாம் பிரதேசத்தில் தற்போது காடு அழிப்பு நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டிருப்பதாக வவுனியா மேலதிக அரசாங்க அதிபர் திருமதி சார்ளஸ் தெரிவித்திருக்கின்றார்.

✱ மட்டக்களப்பு கோரளைப்பற்று தெற்கு கிராமசேவகர் பிரிவைச் சேர்ந்த 383 குடும்பங்கள் மீள்குடியேற்றம் செய்யப்பட்டிருக்கின்றார்கள். இதற்கான ஏற்பாடுகளை மட்டக்களப்பு மாவட்ட புனர்வாழ்வு செயலகம் செய்திருந்தது. மீள்குடியேற்றம் மற்றும் அனர்த்த நிவாரண அமைச்சால் இவர்களுக்கு நிவாரணப் பொருட்கள் வழங்கப்பட்டுள்ளன.

✱ பாதுகாப்பு காரணங்களை முன்வைத்து ஏ9 வீதியில் அரியாலை கிழக்குப் பகுதியில் தடை செய்யப்பட்டிருந்த வயல் நிலப்பகுதிகளில் சுமார் 12 வருடங்களின் பின்னர் நெற்பயிர்ச்செய்கை மேற்கொள்ள அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

இதனை யடுத்து பெரும்போக நெற்பயிர்ச் செய்கை நடவடிக்கைகளில் அப்பகுதி மக்கள் ஈடுபட்டுள்ளனர். இவர் களுக்கு சர்வதேச அமைப் புக்கள் மற்றும் உள்ளூர் நிறுவனங்கள் உதவ முன் வந்திருக்கின்றன.

வங்கிக் கணக்கை பகிர்ந்து கொள்ளுங்கள்

மீண்டும் வாழ்வோம் தொடர்பான இயங்கள் யாவையும் வங்கிக்கணக்கு ஊடாகவும் பண பரிமாற்றங்களையும் தவிர்ப்பதன் மூலம் ஊழியர் எவரையும் சந்தேகிக்கும் நிலை தவிர்க்கப்படும். நீங்கள் தனிப்பட்ட முறையில் உதவ விரும்பினால் கீழ்க்காணும் வங்கிக் கணக்கு விபரங்களை பயன்படுத்தி உங்கள் நண்பர்களை நேரடியாக தொடர்பு கொள்ளுங்கள்.

சி.மெ.இ.இ. 1039 கொழும்பு

தொ.பே: 0774952242

மின்அஞ்சல்:info@lifelinesrilanka.com

பேசும் படம்

புத்தளம் மதீனாநகர் நலன்புரி நிலைய மக்கள் ரமழான் பெருநாளைக் கொண்டாடுவதற்காக புத்தாடைகளை வாங்குவதைப்படத்தில் காணலாம். முஸ்லிம்கள் 30 நாட்கள் தொடர்ந்து நோன்பு நோற்று பின்னர் இந்தப் பெருநாளைக் கொண்டாடுகின்றனர். இந்த மக்கள் இடம்பெயர்ந்து வந்து 18 ஆண்டுகள் நிறைவடைந்திருக்கின்றமை குறிப்பிடத்தக்கது.

மீண்டும் வாழ்வோம்

'மீண்டும் வாழ்வோம்' திட்டமானது இலங்கையின் அசாதாரண சூழ்நிலைகளினால் இடம்பெயர்ந்து முகாம்களில் வாழும் மக்களுக்காகவும் மீள்குடியேறி உள்ளவர்களுக்காகவும் தகவல்களை வழங்கும் பரந்துபட்ட மனிதாபிமான செயற்றிட்ட அமைப்புக்களின் ஓர் அங்கமாகும்.

கிழக்கில் மீளத் திரும்பும் இயல்பு வாழ்க்கை

அண்மையில் திருகோணமலை மாவட்டத்தின் மூதூர் கிழக்கு பகுதிகளான பாட்டாளிபுரம், பள்ளிக்குடியிருப்பு, நல்லூர் ஆகிய பிரதேசங்களை சேர்ந்த 1242 குடும்பங்கள் மீள்குடியேற்றப்பட்டுள்ளனர். இவ்வாறு மீள்குடியேற்றப்படுகின்ற மக்களுக்குத் தேவையான அடிப்படை மற்றும், வாழ்வாதார வசதிகளை பெற்றுக் கொடுப்பதற்கான வேலைத்திட்டங்களை அரசசார்பற்ற நிறுவனங்கள் ஆரம்பித்துள்ளன. மீள்குடியேற்றப்பட்ட பாட்டாளிபுரம் பகுதியில் IOM நிறுவனம் ஏற்கனவே 50 வீடுகளை வழங்கியுள்ளதுடன் மேலும் 26 வீடுகளை அமைத்துக் கொடுப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றது. அதுமட்டுமல்லாமல் ஒவ்வொரு குடும்பத்திற்கும் 30ஆயிரம் ரூபா பெறுமதியான வாழ்வாதார உதவிகளையும் வழங்கவுள்ளதாக IOM நிறுவனத்தின் திட்ட உதவியாளர் தர்ஷினி தவசீலன் கூறியுள்ளார். தற்போது 75 குடும்பங்களுக்கு தாம் உதவி செய்ய இருப்பதாகவும் இன்னும் 35 குடும்பங்களுக்கு உதவி செய்வதற்கு தகவல்களை சேகரித்துக் கொண்டிருப்பதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

இவற்றோடு 75 குடும்பங்களுக்கு நிரந்தர மலசலகூடங்களை அமைத்து கொடுக்க வுள்ளதுடன், 7 பொதுக் கிணறுகளை புனரமைப்பதற்கான நடவடிக்கைகளையும் இந்நிறுவனம் மேற்கொண்டு வருகின்றது. மக்கள் அவர்களது பரம்பரைத் தொழிலை செய்ய நினைத்தாலும் அதற்கான வளங்கள் குறைவாக காணப்படுவதாக கூறும் IOM நிறுவனத்தின் கள உத்தியோகத்தர் ஜெரோம் தெரிவிக்கையில், விவசாயத்திற்கான நிலபுலன்கள், தண்ணீர் வசதிகள் இல்லாமையாலும் கடல்த் தொழிலுக்கு செல்ல முடியாத சிரமமான நிலை காணப்படுவதாலும் மக்களுடைய வாழ்வாதாரம் முற்றாக பாதிக்கப்பட்டுள்ளது என்றார்.

ஐ.ஓ.எம். நிறுவனத்தால் பாட்டாளிபுரம் மீள்குடியேற்ற பகுதியில் வாழ்வாதாரத்துக்காக விதை வெங்காயம் வழங்குவதை காணலாம்.

மீள்குடியேற்ற பகுதிகளில் கல்வி தொடர்பாக சேவ் த சில்ரன் நிறுவனத்தால் தற்காலிக கட்டிடம், மீள் கட்டுமானம், மல சலகூடம், விளையாட்டு முற்றம் போன்ற வற்றை அமைத்துக்கொடுப்பதுடன் பாட சாலை உபகரணங்கள் வழங்குதல், மாண வர்களுக்கு சத்துணவு வழங்கல், ஆசிரியர் பயிற்சி அளித்தல் போன்ற திட்டங்களை முன்னெடுத்து வருகின்றது. இவ்வாறான வசதிகள் செய்து கொடுக்கப்பட்டாலும் இந்த பகுதிகளில் ஆசிரியர் பற்றாக்குறை நிலவுவதாக அந்நிறுவனத்தின் கல்விக்கான நிகழ்ச்சித் திட்ட முகாமையாளர் வரதசீலன் கூறினார்.

இதேவேளை திருகோணமலை சுகாதார திணைக்களத்துடன் இணைந்து OXFAM நிறுவனம் நீரும் சுகாதாரமும் என்ற நோக்குடன் செயற்பட்டு வருகின்றது. இதனடிப்படையில் பள்ளிக் குடியிருப்பு மற்றும் அதன் கிராமசேவகர் பிரிவில் உள்ள 5 கிராமங்களில் முதற்கட்ட மாக 79 மலசலகூடங்கள் அமைத்துக் கொடுக்கப்பட்டுள்ளதுடன் இன்னும் 144 மலசல கூடங்களை அமைத்துக் கொடுப்பதற்கான நடவடிக்கைகள் நடைபெற்று வருகின்றன. இத்துடன் குடிநீர் வழங்கும் திட்டத்தில் OXFAM நிறு வனத்துடன் மூதூர் பிரதேச சபை, ASM ஆகியனவும் இணைந்து மீள் குடியேற்றப் பட்ட பகுதிகளில் குடிநீர் வழங்கி வருவதாக அந்நிறுவனத்தின் நிகழ்ச்சித்திட்ட உத்தியோகத்தர் திருநாவுக்கரசு கோபகன் குறிப்பிட்டார்.

சுகாதாரத்துடன் பள்ளிக்குடியிருப்பு கிராமசேவையாளர் பிரிவில் முதல் கட்டமாக குடியமர்த்தப்பட்ட 237 குடும்பங்களுக்கு விவசாயம் செய்வதற்கான வாழ்வாதார உதவிகள் வழங்கப்பட்டுள்ளதாகவும் திருநாவுக்கரசு கோபகன் தெரிவித்தார்.

சுகாதாரம்

இன்றைய காலகட்டத்தில் தகவல்கள் அதிக முக்கியத்துவம் பெறுகின்றன. தகவல் பரிமாற்றத்தின் மூலமாகவே சமூகத்தின் பல்வேறு தேவைகள் பூர்த்தி செய்யப்படுகிறது. இடம்பெயர்ந்து வாழும் மக்களுக்கு மனிதாபிமான சேவைகள் குறித்த தகவல்களை அறிந்துகொள்வதற்கும் தமது பாதுகாப்புக் குறித்த தகவல்களைப் பெற்றுக்கொள்வதற்கும் தகவல் பரிமாற்று ஊடகம் ஒன்று அத்தியாவசியமாகிறது. இதனைக் கருத்திற் கொண்டு இடம்பெயர்ந்த மக்களுக்கான வானொலி வழங்கும் செயற்றிட்டத்தினை திரு கோணமலையின் சுமேதங்கரபுர கிராமத்திலிருந்து 1983களில் இடம் பெயர்ந்து மீண்டும் அங்கு குடியேற்றப்பட்டுள்ள 74 குடும்பங்களுக்கு இன்டர்நியூஸ் அமைப்பானது வானொலிப் பெட்டிகளை வழங்கியது. இந்நிகழ்வின் போது வானொலிப் பெட்டியானது தமது அன்றாட வாழ்க்கைக்கு எவ்வாறு பயனளிக்கும் என்பது தொடர்பாக அப்பகுதியிலுள்ள மக்கள் எம்மோடு பகிர்ந்துகொண்ட கருத்துக்கள் இவை

நபர் 1: ஆரம்பகாலத்தில் வானொலிப்பெட்டி எம்மிடமிருந்தது. அங்குமிங்கும் இடம்பெயர்ந்ததன் காரணமாக அவற்றை இழந்துவிட்டோம். கொட்டில் வீடு கட்டிக்கொண்டு இருக்கின்றோம். இங்கு எவ்வித சத்தமும் இல்லை. யாராவது வெளியிலிருந்து இங்கு வந்தால்தான் கதைக்க முடியும். ஆகவே வெளியில் நடக்கின்ற விஷயங்கள் எவையும் எமக்குத் தெரிவதில்லை. இந்த வானொலிப் பெட்டியினை வழங்கியதன் காரணமாக வெளியில் நடக்கும் விஷயங்களை அறிந்துகொள்ள முடியும். எனவே இன்டர்நியூஸ் அமைப்பிற்கு எமது நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

நபர் 2: தற்போது மிகவும் சந்தோசமாக இருக்கிறது. ஏதேனும் நிகழ்வுகள் நடந்தால் அறிந்து கொள்ள முடியும்.

நபர் 3: இந்த பிரச்சினைக் குரிய காலகட்டத்தில் வானொலிப்பெட்டிகள் வீடுகளில் இருப்பது மிகவும் நல்லது. இலங்கையில் நடக்கின்ற பிரச்சினைகளை இனி எம்மால் அறிந்து கொள்ள முடியும்.

நபர் 4: இன்டர்நியூஸ் நிறுவனம் வானொலிப் பெட்டியினை எமக்கு வழங்கியுள்ளது. செய்திகள் பாட்டு என்பவற்றை எமது விருப்பத்திற்கேற்ப கேட்க இயலும். இவ்வளவு காலமும் எம்மிடம் வானொலிப்பெட்டி இருக்கவில்லை.

வாழ்வின் வர்ணங்கள்

இடம்பெயர்ந்து முகாம்களில் வாழும் மக்களின் வாழ்வு பல சிரமங்கள் நிறைந்தது. எனினும் சில சுவையான அனுபவங்களும் இருக்கத்தான் செய்கிறது. பல்வேறு பிரதேசங்களில் முகம் தெரியாதவர்களாய் வாழ்ந்த மக்கள் ஒரே முகாமில் ஒன்றாக வாழும் நிர்ப்பந்தம் ஏற்பட்டதும் அதுவே சில உறவுகளை உருவாக்கி விடுகிறது. மட்டக்களப்பு களுவாங்கேணி NRC முகாமில் வசிக்கும் 14 வயதான சரஸ்வதி திருகோணமலையிலிருந்து இடம்பெயர்ந்து வந்தவர். வயதில் சிறியவராக இருந்தாலும் இம்முகாமின் செயற்பாட்டுக்குமுழுவில் ஒருவராக இருந்து நிர்வாக நடவடிக்கைகளுக்கு உதவி செய்துவருகிறார். தம்மோடு இருந்த உறவுகள் தம்மை விட்டு தமது சொந்த இடங்களுக்கு திரும்பிச் செல்லும்போது தனது உணர்வுகள் எப்படியிருக்கிறது என்பதை வாழ்வின் வர்ணங்களில் பகிர்ந்துகொள்கிறார்.

அதிகமான மக்கள் இருந்தார்கள். சந்திக்காத முகங்களையெல்லாம் சந்தித்தோம். அவர்களையெல்லாம் விட்டுப் பிரிந்தது கவலையாக இருக்கின்றது. அவர்கள் போகும்போது நாங்கள் இங்கிருக்கின்றோம். ஆனால் நாங்கள் இங்கிருந்து போகும்போது இங்கு யாரும் இருக்கமாட்டார்கள். எல்லோரையும் ஒரேயடியாக அனுப்புவார்கள். ஈரலைக்குளம், வடமுனை ஆட்களும் வேப்பவெட்டுவான் ஆட்களும்தான் இங்கு இருக்கிறோம். முகாமிற்கு வந்ததும் கவலையாகவும் இருந் தது மகிழ்ச்சியாகவும் இருந்தது.

(01 ஆம் பக்கத் தொடர்ச்சி)

வன்னியிலிருந்து மனிதாபிமான தொண் டர் அமைப்புக்கள் அனைத்தும் வெளியேறிய நிலையில் சர்வதேச செஞ்சிலுவை சங்கம் தனது பணிகளை அரசாங்கத்தின் அனு மதியுடன் அங்கு தொடர்கிறது.

உடுபுடைவை வசதிகள், நீர் வசதிகள் ஆகியவற்றை வழங்குவதற்கும் மின்சார வசதியை வழங்குவதற்குமான அனைத்து ஏற்பாடுகளும் செய்யப்பட்டுள்ளதாக மீள்குடியேற்றம் மற்றும் அனர்த்த நிவாரண சேவைகள் அமைச்சின் செயலாளரான A.C.R. ஏஜீக் தெரிவித்துள்ளார்.

கிளிநொச்சி மாவட்டத்திற்கு மாத்திரம் கடந்த ஒரு மாதகாலமாக இந்தத் தேவைகளுக்கென 25 மில்லியன் ரூபா பணம் அரசாங்கத்தினால் வழங்கப்பட்டுள்ளதாகவும் தற்போதுள்ள நிலைமைகளை கையாள்வதற்கென வவுனியா மாவட்ட அரசாங்க அதிபருக்கு 50 இலட்சம் ரூபா வழங்கப்பட்டுள்ளதாகவும் ரீசீக் குறிப்பிட்டுள்ளார்.

வன்னியிலிருந்து அரசாங்க கட்டுப்பாட்டிலுள்ள வவுனியா நோக்கி இடம்பெயரும் மக்களுக்குத் தேவைப்படும் மனிதாபிமான உதவிகளை வழங்குவதற்கான முன்னேற்பாட்டு நடவடிக்கைகள் மேற்கொள்ளப் பட்டுள்ளன.

வவுனியா நோக்கி இடம்பெயரும் மக்களின் இருப்பிட வசதிகளைக் கையாள்வதற்கு ஒரு குழுவும் முகாமைத்துவம் சம்பந்தமான விடயங்களை கையாள்வதற்கு ஒரு குழுவும் சுகாதார வசதிகளை மேம்படுத்துவதற்காக ஒரு குழுவும் தண்ணீர் வசதிக்கென ஒரு குழுவும் கல்வி நடவடிக்கைகளைக் கையாள்வதற்கென ஒரு குழுவுமாக பல்வேறு குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளதாக வவுனியா மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் சார்ள்ஸ் கூறினார்

வன்னியில் இருந்து இடம்பெயரும் மக்களை வவுனியாவில் தற்காலிகமாகத் தங்க வைப்பதற்கான தங்குமிட வசதிகள் ஏற்படுத்தப்பட்டுள்ளதாகவும் நீண்ட கால குடியமர்த்தலுக்காக மெனிக்பாம் பகுதி தயார் படுத்தப்பட்டுள்ளதாகவும் அவர் மேலும் கூறினார்.

இதேவேளை இடம்பெயர்வுகள் நாளாந்த நிகழ்வுகளாகிப் போய்விட்ட மக்களுக்கு நிரந்தர அமைதி மட்டுமே ஆறுதலை தர முடியும் என்பதே பலரினதும் ஒருமித்த கருத்தாகும்.

சிறுவர் தினமும் தீர்க்கப்படாத பிரச்சினைகளும்

இந்த கட்டுரையை வாசித்துக் கொண்டிருக்கும் இந்த கணப்பொழுதில் உலகின் ஏதோ ஒரு பகுதியில் ஒரு குழந்தை உயிரிழந்திருக்கும். இந்த செய்தி அதிர்ச்சியளிக்கலாம் ஆனால் இது தான் உண்மை.

உலகில் ஒவ்வொரு வருடமும் சராசரியாக 10 மில்லியனுக்கும் அதிகமான குழந்தைகள் பல்வேறு காரணிகளால் உயிரிழப்பதாக புள்ளி விபரங்கள் வெளியாகி உள்ளன.

உலகளாவிய ரீதியில் போசாக்கான உணவிற்கு ஏற்பட்டுள்ள தட்டுப்பாடு முதல் அடிப்படை சுகாதார வசதிகளை கூட பெற முடியாத நிலைக்கு தள்ளப்பட்டு வரும் மக்கட்தொகையின் அதிகரிப்பு

தொடர்ச்சியான இடம்பெயர்வுகள் சிறுவர்களை மனச்சிதைவுகளுக்கு உள்ளாக்குவதாகவும் இதனால் அவர்கள் உளவியல் ரீதியான பாதிப்புகளுக்கு உள்ளாவதாகவும் மருத்துவ வட்டாரங்கள் குறிப்பிட்டுள்ளன

வரை பல காரணங்களை சிறுவர் பாதுகாப்பு அமைப்புகள் முன்வைத்து வருகின்றன.

ஆனாலும் சிறுவர் இறப்பு வீதத்தை கட்டுப்படுத்தவோ அல்லது அதனை குறைப்பதற்கோ இன்னும் முடியாத தாகவே உலகம் இயங்கி வருகின்றது.

ஒவ்வொரு வருடமும் ஒக்ரோபர் முதலாம் திகதி சிறுவர்கள் தினமாக கொண்டாடப்பட்டு வருகின்றது

சிறுவர் பாதுகாப்பின் அவசியம் குறித்தும் சிறுவர்களுக்கு எதிரான வன்முறைகளை கட்டுப்படுத்துவதற்கான விழிப்புணர்வை மக்கள் மத்தியில் ஏற்படுத்துவதற்குமாக இந்த தினம் சிறப்பான முறையில் உலக நாடு களில் கொண்டாடப்படுகின்றது

வன்னியில் உள்ள அகதிமுகாமொன்றில் சமையலில் ஈடுபட்டுள்ள சிறுவர்கள்

இலங்கையில் தொடர்ச்சியான யுத்த அனர்த்தங்களால் அதிகளவில் சிறுவர்களே பாதிக்கப்பட்டு வருவதாக பல்வேறு சிறுவர் பாதுகாப்பு அமைப்புகளும், ஐக்கிய நாடுகளும் சுட்டிக்காட்டி வருகின்றன.

தொடர்ச்சியான இடம்பெயர்வுகள் சிறுவர்களில் மனச் சிதைவுகளை ஏற்படுத்துவதாகவும் இதனால் அவர்கள் உளவியல் ரீதியான பாதிப்புகளுக்கு உள்ளாவதாகவும் மருத்துவ வட்டாரங்கள் குறிப்பிட்டுள்ளன

இடம்பெயர்வுகள் தொடர்கதையாகிப் போன வன்னி பெருநிலப் பரப்பில் வாழும் சிறுவர்களின் போசாக்கு உணவு குறித்து சிறுவர்களை பாதுகாக்கும் அமைப்பு கவலை வெளியிட்டுள்ளது.

அந்த அமைப்பினர் அரசாங்கத்தின் வேண்டுகோளை ஏற்று கிளிநொச்சியில் இருந்து வெளியேறுவதற்கு முன்பாக ஆயிரக்கணக்கான குழந்தைகளுக்கு தேவையான அடிப்படை வசதிகளை ஏற்படுத்திக் கொடுத்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

கடந்த மாத செயல்பாடுகள் குறித்த அந்த அமைப்பின் அறிக்கையின் பிரகாரம் கிளிநொச்சி மாவட்டத்தில் இடம்பெயர்ந்துள்ள சுமார் 3500 சிறுவர்களுக்கு தேவையான சிறுவர் ஆடைகளையும் 1200 அடிப்படை சுகாதார பொதிகளையும் இந்த அமைப்பு வழங்கியுள்ளது.

குறிப்பாக நலன்புரி நிலையங்களில் வாழும் சிறுவர்களை ஒன்று திரட்டி சிறுவர் கழகங்களை அமைத்து அதன் மூலம் சிறுவர்கள் உளநலன் விருத்தி செயல் பாடுகள் சிறுவர் பாதுகாப்பு அமைப்பு நடைமுறைப்படுத்தி வந்திருந்தது.

இதேவேளை பெற்றோரை இழந்த சிறுவர்களுக்கும் வாழ்வாதார உதவிகளை சிறுவர் பாதுகாப்பு அமைப்பு வழங்கி வருகின்றது.

தொடர்ச்சியான யுத்த முனைப்புகள் மற்றும் இடம்பெயர்வுகள் சுயாதீன போக்குவரத்திற்கான கட்டுப்பாடுகள் என வன்னியில் வாழும் சிறுவர்கள் முகம் கொடுத்து வரும் பிரச்சினைகள் ஏராளம்.

இதேவேளை அமைதியான வாழ்க்கைச் சூழல் நிலவும் இலங்கையில் ஏனைய பகுதிகளில் வாழும் சிறுவர்களும் பல்வேறு விதமான பாதிப்புகளை எதிர் நோக்கி வருவதாக தேசிய சிறுவர் பாதுகாப்பு செயலகம் தெரிவித்துள்ளது.

குழந்தை தொழிலாளர்கள் மற்றும் சிறுவர்கள் மீதான வன்முறைகள் என நாளாந்தம் தமக்கு முறைப்பாடுகள் கிடைத்து வருவதாக அந்த அமைப்பின் அதிகாரி ஒருவர் குறிப்பிட்டார்.

குழந்தைகள் மீதான வன்முறைகள் அவர்களுக்கு நெருக்கமானவர்களாலேயே அதிகளவில் மேற் கொள்ளப்பட்டு வருவதாக அவர் சுட்டிக் காட்டினார்.

அதிகரித்து வரும் பொருளாதார சுமை காரணமாக சிறுவர்கள் கற்றல் செயற் பாடுகளை இடை நிறுத்தி தொழில் புரியும் நிலைக்கு தள்ளப் படுகின்றனர்.

சிறுவர்களை வேலைக்கு அமர்த்துதல் தண்டனைக்குரிய குற்றமாக அறிவிக்கப் பட்டுள்ள போதிலும் குழந்தை தொழிலாளர்களின் எண்ணிக்கை தொடர்ச்சியாக அதிகரித்து வருகின்றது.

இதேவேளை போதுமான போசாக்குணவை பெறமுடியாததால் குறைந்த நிறை கொண்ட சிறுவர்களின் எண்ணிக்கையும் கணிசமாக அதிகரித்துள்ளது

எதிர்பார்க்கப்பட்ட அளவினை விட மூன்று மடங்கு சிறுவர்கள் குறைந்த நிறையுடன் காணப்படுவதாக உலக உணவுத் திட்டத்தின் பிரதி தலைவர் லுயுகிமி தெரிவித்துள்ளார்.

சிறுவர் உரிமைகள் குறித்து சிறுவர்களுக்கு விழிப்புணர்வூட்டும் செயல்திட்டங்கள் பல்வேறு மட்டங்களில் மேற்கொள்ளப்பட்டு வந்தாலும் அவை போதுமான பலனை தருவதற்கு நீண்ட காலம் எடுக்கும் என்பதே கவலைக்குரிய நிஜம். அதுவரை தினமும் பல்வேறு வழிகளில் பாதிப்புகளில் இருந்து சிறுவர்களை பாதுகாப்பதற்கு எங்களால் முடிந்த நடவடிக்கையினை நாம் ஒவ் வொருவரும் மேற்கொள்வதே இன்றைய காலத்தின் தேவையாகும்.

அரச கட்டுப்பாட்டற்ற பகுதிக்குள் தொடர்ந்தும் பணிகளை முன்னெடுக்கும் சர்வதேச செஞ்சிலுவை சங்கம்

கடந்த சில மாதங்களாக இலங்கை அரசுக்கும் தமிழீழ விடுதலைப்புலிகளுக்கும் இடையில் இலங்கையின் வடக்குப் பகுதியில் நடைபெற்று வரும் யுத்தம் காரணமாக ஆயிரக்கணக்கான மக்கள் பாதிக்கப்பட்டுள்ளார்கள். சர்வதேச மனிதாபிமான அமைப்புக்கள் அரச கட்டுப்பாடற்ற பகுதியான வன்னியிலிருந்து வெளியேறியுள்ள நிலையில் சர்வதேச செஞ்சிலுவை சங்கமானது தொடர்ந்தும் தனது பணியை முன்னெடுத்து வருகின்றது. இச்சூழ்நிலையில் மக்களும் தொண்டு நிறுவனங்களும் எதிர் கொள்ளும் சவால்கள் குறித்து அறிந்துகொள்வதற் காக சர்வதேச செஞ் சிலுவை சங்கத்தின் இலங்கைக்கான பிரதித் தலைவர் அன்ரனி டெல்சியல் அவர்களை நேர்கண்டுள்ளோம்.

அனைத்து தொண்டு நிறுவனங்களும் வெளியேறிய நிலையில் சர்வதேச செஞ் சிலுவை சங்கம் மாத்திரம் அங்கு தனது பணியை முன்னெடுப் பதற்கான காரணம் என்ன?

சர்வதேச செஞ்சிலுவை சங்கமானது உலகளாவிய ரீதியில் யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு பாதுகாப்பளித்து உதவிகளை வழங்கி வருகிறது. எமது கொள்கையானது போரில் ஈடுபட்டுள்ள இரு தரப்பினராலும் ஏற்றுக்கொள்ளப்பட்டு கடந்த 25 ஆண்டு காலமாக எமது பணியை இலங்கையில் தொடர்ந்து செய்து வருகின்றோம். கலவரத்தால் பாதிக்கப்பட்டுள்ள மக்களுக்கு வன்னியிலிருந்து கொண்டு மனிதாபிமானப் பணிகளை தொடர்ந்து மேற்கொள்வதாகவே இலங்கை அரசுடன் செய்துகொண்டுள்ள ஒப்பந்தத்தில் தீர்மானிக்கப்பட்டுள்ளது. வன்னியிலிருந்து கொண்டு தனது மத்தியஸ்த நடவடிக்கைகளை சர்வதேச செஞ்சிலுவை சங்கம் தனது கொள்கைகளின் சாராம்சத்திற் கிணங்க முன்னெடுக்கும். குறிப்பாக அரச கட்டுப்பாடு மற்றும் கட்டுப்பாடற்ற பகுதிகளுக்கிடையில் ஓமந்தை வீதியின் மூலம் பயணிக்கும் மக்களுக்கும் அவர்களது வாகனங்களுக்கும், அம்புலன்ஸ் போன்றவற்றிற்கும் உதவிகளை செய்து வருகின்றது. அத்தோடு போரின் போது இறந்தவர்களின் உடல்களைப் பெற்று அவற்றை அவர்களது உறவினர்கள் அடக்கம் செய்வதற்காக அனுப்பி வைக்கின்றோம். செப்டம்பர் மாதத்தின் முதல் இரண்டு வாரங்களில் கிடைக்கப்பெற்ற 80 பேரின் சடலத்தை ஓமந்தையூடாக கையளித்துள்ளோம்.

வன்னியில் பணிகளை முன்னெடுத்து வரும் உங்கள் பணியாளர்களின் பாதுகாப்பை கவனத்தில் எடுத்துள்ளீர்களா?

சர்வதேச செஞ்சிலுவை சங்கம் மனிதாபிமான நடவடிக்கைகள் மற்றும் பாதிக்கப்பட்டுள்ள மக்களின் தேவைகள் குறித்து கண்காணித்து வருகின்றது. இருந்த போதிலும் கடந்த சில வாரங்களாக ஏற்பட்டுள்ள சூழ்நிலை பாதுகாப்பு குறித்து அதிக கவனத்தை செலுத்த வேண்டிய நிலையை உருவாக்கியுள்ளது. மேலும் இலங்கை பாதுகாப்புத்தரப்பிற்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில் அன்றாட தொடர் பாடல்களையும் மேற்கொண்டு வருகிறது. இத்தொடர்பாடல் நடவடிக்கையானது அங்கிருந்து எம்முடைய நடவடிக்கைகளை மேற் கொள்வதற்கான உத்தரவாதத்தை வழங்குகிறது. இந்த சிக்கலான சூழ்நிலையில் நாம் எம்முடைய பணியைக் கண்டிப்பாக முன்னெடுக்க வேண்டியுள்ளது. எமது பணியாளர்களுக்கு பாதிப்பில்லாத வகையில் இடம்பெயர்ந்த மக்களுக்கும் பொது மக்களுக்கும் பாதிப்புகள் ஏற்படாத வண்ணம் பணியைத் தொடர வேண்டும்.

வன்னியில் தற்போதைய நிலை குறித்து என்ன கூற விரும்புகின்றீர்கள்?

இடம்பெயர்ந்த மக்களுக்கு பாதுகாப்பு, சுகாதாரம், குடிநீர், தங்குமிடம் மற்றும் உணவு என்பன மிக அடிப்படைத் தேவையாக உள்ளது. சிக்கலான சூழ் நிலையிலும் இடம்பெயர்ந்து செல்லும் மக்களுடன் சேர்ந்து உள்ளூர் சுகாதார சேவை நிலையங்களும் இடம் பெயர்ந்து சென்று மக்களது மருத்துவ மற்றும் சுகாதார வசதிகளைக் கவனித்து வருகிறது. கிளிநொச்சி மாவட்ட மருத்துவப் பணிமனையில் வழமைக்கும் மாறாக நோயா ளர்கள் சிகிச்சை பெற வந்து கொண்டிருக்கின்றார்கள். இது வரை பெரியள விலான பாதிப்புகள் இல்லாவிட்டாலும் கூட எதிர் வரும் மழை காலங்களில் சுகாதாரம் குறித்து அதிக கவனம் செலுத்த வேண்டியி ருக்கும்.

சர்வதேச செஞ்சிலுவை சங்கம் தனது பணியை முன்னெடுத்து வரும் ஓமந்தைப் பாதை

வன்னியில் இடம்பெயர்ந்த மக்களுக்கு எந்த வகையில் சர்வதேச செஞ் சிலுவை சங்கம் உதவி வருகிறது?

இந்த ஆண்டின் ஜூலை மற்றும் ஆகஸ்ட் மாதங்களுக்கு இடைப்பட்ட காலப் பகுதியில் இடம் பெயர்ந்த 84,000 பேருக்கு குடிநீர், தங்குமிடம் மற்றும் அடிப்படை வசதிகளை செய்துகொடுக்கக் கூடியதாக இருந்தது. அவர்கள் சுகாதார மற்றும் குழந்தை பராமரிப்பு பொருட்களையும் நுளம்பு வலை, தற்காலிகக் கூடாரங்களை அமைப்பதற்கான பொருட்கள் வீட்டிற்குத் தேவையான படுக்கை மற்றும் விளக்குகள் போன்றவற்றையும் வழங்கிக்கொண்டிருக்கின்றோம். மேலும் அவர்களுக்கு சுத்தமான நீரைப் பெற்றுக்கொள்ள குழாய்க்கிணறுகளை அமைத்து கிணறுகளையும் புனரமைத்துக் கொடுத்திருக்கின்றோம். சர்வதேச செஞ்சிலுவை சங்கம் தமது உள்ளூர் தொண்டர் பணியாளர்களின் உதவியுடன்மேற்குறிப்பிட்ட பணிகளை மேற்கொண்டு வருகிறது.

உங்கள் கதைகள்

மீண்டும் வாழ்வோம் வானொலி நிகழ்ச்சியில் உங்கள் கதைகள் இடம்பெறக் காத்திருக்கின்றன. ஒவ்வொரு நிகழ்ச்சியிலும் ஒலிபரப்பாகும் நாடகங்களின் தொகுப்பை மீண்டும் வாழ்வோம் பத்திரிகை வாயிலாகவும் உங்களுக்கு அறியத் தருகின்றோம். வடக்கு கிழக்குப்பகுதிகளில் இருந்து பல்வேறு காரணங்களால் இடம் பெயர்ந்து முகாம்களில் வாழும் மக்களுக்கு சிறுவர் கல்வி குறித்து எடுத்துக் கூறும் வகையில் **'சிறுவர் கல்வி'** குறுநாடகம் அமைந்தது. குறுநாடகத்தின் தொகுப்பு கீழே தரப்படுகின்றது.

சிறுவர் கல்வி

மீண்டும் வாழ்வோம் நிகழ்ச்சியின் உங்கள் கதைகள் குறு நாடக பகுதியில் சிறுவர் உரிமைகள் தொடர்பில் மக்கள் மத்தியில் விழிப்புணர்வை ஏற்படுத்தும் நோக்கில் பல நாடகங்களை வழங்கியிருந்தோம். சிறுவர்களது எதிர்காலத்தில் முக்கிய பங்கு வகிப்பது கல்வி.

இந்த விடயம் தொடர் பாகவே கடந்த வாரம் சிறு வர் கல்வி என்ற நாடகம் ஒலிபரப்பானது.

வறுமைக் கோட்டுக்குக் கீழ் வாழும் பெற்றோர் தமது பிள்ளைகளின் கல்வி பற்றி பெரிதாக சிந்திப்பதில்லை. காரணம் அவர்களைச் சூழ்ந்துள்ள வறுமை. தற்போது எமது நாட்டைப் பொறுத்த வரையில் யுத்தத்தினால் சொந்த இடங்களை விட்டு இடம்பெயர்ந்து முகாம்களில் வாழும் சிறார்கள் தமது கல்வியைத் தொடர்வதில் பெரும் இன்னல்களை எதிர்கொள்கிறார்கள். குடும்ப சூழ்நிலை காரணமாக சில பெற்றோர் தமது பிள்ளைகளை மிகச் சிறிய வயதிலேயே வேலைக்கு அனுப்புகிறார்கள். சில பெற்றோர் தமது பிள்ளைகளை பாடசாலைக்கு அனுப்புகிறார்கள். ஒரே முகாமிலிருந்து பாடசாலைக்கு சென்று வந்த கண்ணன், ராஜா என்ற இரு சிறுவர்களில் ராஜாவின் குடும்பம் கஷ்டத் தின் காரணத்தால் அவனது பெற்றோர் அவனை பாடசாலையில் இருந்து இடை நிறுத்தி விட்டார்கள். ஆனால் கண்ணன் தொடர்ந்து பாடசாலைக்கு செல்கிறான். கண்ணன் பாடசாலைக்கு சென்று வரும் போதெல்லாம் பார்க்கும் ராஜாவுக்கு தனது படிப்பை இடையில் நிறுத் திய பெற்றோர மீது கோபம் வருகிறது. சிறுவயதில் இருந்து நண்ப னாக இருந்த கண்ணனுடன் பேசுவதற்கு கூட தயக்கம் காட்டுகிறான். மனதளவில் தாக்கத் தோடு வேலைக்கு சென்று வரும் ராஜாவைப் பற்றி அவனது பெற்றோர் அக்கறை காட்டாமல் தொடர்ந்து வேலைக்கு அனுப்புகிறார்கள்.

இந்த நிலையில் சிறுவர் கட்டாயக் கல்வி தொடர்பாக செயற்பட்டு வரும் தொண்டர் நிறுவனம் ஒன்றிலிருந்து வரும் குமரன் என்பவர் பாடசாலை செல்லும் வயதில் சிறுவர் தொழிலாளியாக பணிபுரியும் ராஜாவின் தாயிடம் சிறுவர்களின் கட்டாயக் கல்விக்கான முக்கியத்துவம் பற்றி தெளிவாக கூறுகிறார். சிறுவர்களை வேலைக்கு அமர்த்துவது மட்டுமல்ல அவர்களை வேலைக்கு அனுப்பவது கூட குற்றமான செயல் தான் என்றும் கூறுகிறார். குடும்ப சூழ்நிலை காரணமாகத் தான் தனது பிள்ளையை வேலைக்கு அனுப்பியதாக ராஜாவின் தாய் கூறினார். ராஜாவின் குடும்ப சூழ்நிலையை புரிந்து கொண்ட குமரன், தனது நிறுவனம் இடம் பெயர்ந்து முகாம்களில் வாழும் சிறுவர்களின் கல்விக்காக சில உதவிகளை வழங்குவதாகவும், ராஜாவும் அந்த உதவிகளைப் பெற்றுக் கொண்டால் தொடர்ந்து பாடசாலைக்கு செல்ல முடியும் என்றும் கூறுகிறார். ராஜாவின் தாயார் தனது பிள்ளையின் எதிர்காலத்தைப் பற்றி தான் சிந்திப்பதாகவும், அதற்காக தனது மகனை மறுபடியும் பாடசாலைக்கு அனுப்புவதாகவும் கூறினார். ஒவ்வொரு பெற்றோரும் கட்டாயமாக தமது பிள்ளைகளின் கல்வி பற்றி சிந்தித்தே ஆக வேண்டும். காரணம் இனிவரும் காலங்களில் கல்வியின் முக்கியத்துவம் அதிகரித்தே காணப்படும்.

பிள்ளைகளின் கல்வியில் அக்கறை காட்டாத பெற்றோருக்கு சிறுவர்களின் கட்டாயக் கல்வி தொடர்பிலான விழிப்புணர்வை ஏற்படுத்துவதே இந்த நாடகத்தின் நோக்கமாகும்.

மீண்டும் வாழ்வோம் (LifeLine) செய்திட்டமானது USAID இனால் நிதியளிக்கப்பட்டு Internews Network இனால் நடைமுறைப்படுத்தப்படுகின்றது

INTERNEWS USAID FROM THE AMERICAN PEOPLE

மீண்டும் வாழ்வோம் நிகழ்ச்சியில் உங்கள் கதைகள் பகுதிக்கு உங்கள் வாழ்க்கையில் இடம்பெற்ற சம்பவங்களை எழுதி அனுப்புங்கள். இவற்றை நாடக வடிவில் தொகுத்து உங்கள் கதைகளாக ஒலிபரப்பக் காத்திருக்கின்றோம். உங்கள் கதைகள் மற்றவர்களுக்கும் படிப்பினையாக அமையும் என்பதே மீண்டும் வாழ்வோம் நிகழ்ச்சியின் எதிர்பார்ப்பாகும்.

இப்பத்திரிகை எக்ஸ்பிரஸ் நியூஸ்பேப்பர்ஸ் (சிலோன்) லிமிட்டெட்டாரால் கொழும்பு-14, கிராண்ட்பாஸ் வீதி, 185 ஆம் இலக்கத்தில் 2008ஆம் ஆண்டு செப்டெம்பர் மாதம் 28 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை அச்சிட்டு வெளியிடப்பட்டது.